**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI**
**Deposition of Witnesses for R.W.1 in MCOP.No.506/2023**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஞானராஜ் | தந்தை / கணவர் பெயர் | : தனிஸ்லாஷ் |
| கிராமம் | : | தாலுகா | : மணப்பாறை |
| வயது | : | தொழில் | : |

Solemnly affirmed accordance with the provisions of the Act of 1973 of the day of 26.02.2026.

எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சி ஞானராஜ் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.ஆறுமுகம், கிரேடு-2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். (மேற்படி சாட்சி மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.)

**குறுக்கு விசாரணை**

தாவா விபத்து சம்மந்தமாக என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மனுதாரர்தான் கவனக்குறைவாக வந்து நான் ஓட்டி வந்த பேருந்து மீது மோதிவிட்டார் என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் நான் பணிபுரியும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் இந்த மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது நிர்வாகம் என் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற காரணத்திற்காகவே உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- ஞானராஜ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.